| | | | | |
|---|---|---|---|---|
| MSSRF Science for Sustainable Development | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | |
| மாவட்டம் : | சிவகங்கை | காலம் : 19/03/2022 | முதல் | 23/03/2022 |
| அறிக்கை எண் : | 022/ 2022 | வெளியீட்டு நாள் : | 18/03/2022 | |

## சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 37° - 39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21° - 25° செல்சியஸ் ஆகவும் பதிவானது

| கடந்தவார வானிலை (15.03.2022 முதல் 17.03.2022) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 23-03-2022- 08.30 வரை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **15/03** | **16/03** | **17/03** | | தேதி | நாள்-1 19/03 | நாள்-2 20/03 | நாள்-3 21/03 | நாள்-4 22/03 | நாள்-5 23/03 |
| 0.0 | 0.0 | 0.0 | | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 37 | 38 | 39 | | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 39 | 39 | 40 | 40 | 40 |
| 21 | 24 | 25 | | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 25 | 25 | 26 | 26 | 26 |
| 5 | 4 | 5 | | மேக மூட்டம் (ஆக்டா) | 2 | 4 | 4 | 4 | 3 |
| 49 | 64 | 64 | | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 24 | 37 | 27 | | | 45 | 45 | 50 | 50 | 50 |
| 8 | 5 | 5 | | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 6 | 6 | 6 | 6 |
| **கிழக்கு** | **வட கிழக்கு** | **கிழக்கு** | | **காற்றின் திசை** | தென் கிழக்கு | **தென் மேற்கு** | தெற்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு |

**குறுஞ்செய்தி** :

அடுத்த 5 நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலையானது 39°- 40° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 25° -26° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 கி.மீ வேகத்தில், தென்கிழக்கு, தென்மேற்கு மற்றும் தெற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

**அதிகபட்ச வெப்பநிலை :**

அடுத்த 7 நாட்களுக்கு மாவட்டத்தில் அதிக பட்ச வெப்பநிலையானது பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 30° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

குறைந்த பட்ச வெப்ப நிலையை பொருத்த மட்டில், மாவட்டத்தில் அடுத்த 7 நாட்களுக்கு பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**வெப்பநிலை எச்சரிக்கை:**

எதிர்வரும் 19/03/2021 மற்றும் 20/03/2021 ஆகிய தேதிகளில் தமிழகத்தில் ஒரு சில பகுதிகளில் உயர்ந்த பட்ச வெப்பநிலையானது இயல்பை விட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் அதிகரித்து காணப்படும். இதன் காரணமாக பருத்தி, எள், கத்தரி மற்றும் வெண்டை சாகுபடி செய்யும் விவசாயிகள் தங்கள் வயலில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணிக்கவும்.

**இடி மின்னல் எச்சரிக்கை:**

தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மார்ச் 19 மற்றும் 20 தேதி இடி மின்னலுக்கான வாய்ப்பு உள்ளது. வயல்களில் ஆடுகளை கிடை அமர்த்துதல் மற்றும் மேய்ச்சலின் போது போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியே அனுப்பாமல், மின் கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப்
படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : கத்தரி, எள், கால்நடை.**

**கத்தரி:**

தற்போது நிலவும் கோடை காலத்தில் கத்தரிபயிரில் வெள்ளை ஈக்களின் தாக்குதல் அதிகமாக இருக்கும். இதனைக் கட்டுப்படுத்த மஞ்சள் நிற ஒட்டும் பசை அட்டைப்பொறி எக்டருக்கு 12 வீதம் வைக்கவேண்டும். மேலும் லிட்டர் தண்ணீருக்கு 3 மில்லி வேப்பெண்ணெய் மற்றும் 1 மில்லி டீப்பால் என்ற ஒட்டும் திவரம் கலந்து தெளிக்கவேண்டும்.

**எள்:**

நிலவும் பருவச்சூழ்நிலையில் எள் பயிரில் (பச்சைப்பூ) பூவிலைநோய் தாக்குதல் பரவலாகதென்படுகின்றது. நோய்தாக்குதலினால் செடியின் அனைத்து பூக்கும் பகுதிகளும் பச்சை இலைகளாகமாறும், பூக்கும் பாகங்களின் நரம்புகளில் உள்ளபச்சைநிறமானதுவெளிர்ந்துகாணப்படும். மிகவும் தீவரமாகபாதித்தபகுதிகளில் பூக்கள் முழுவதும்சிறுசிறு இலைகளாகஅடர்ந்தநிலையில்,சிறிய இடைக்கணுக்களைக் கொண்டு,கிளைகள் வளைந்துகாணப்படும். காய்கள் வளர்ந்தாலும் அதில் விதைகள் காணப்படாது.இப்பூவிலைவைரஸ் நோயானதுஓரோசியஸ் அல்பிசின்டஸ் எனும் தத்துப்பூச்சியினால் பரவுகிறது.இதனைக்கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 35 கிராம் என்ற அளவில் காப்பர்ஆக்சிக்குளோரைடுஉடன் 10 மில்லி ஒட்டுப்பசை கலந்து தெளிக்கவும்.

**கால்நடை:**

தற்போது நிலவும் வெப்பமான பருவச்சூழ்நிலையில் மாடுகளை பாதுகாக்க 3 பெரிய நெல்லிக்காய்களை இடித்து தீவனத்துடன் கலந்து கொடுக்கலாம், மேலும் கறவை மாடுகளுக்கு நாள் ஒன்றுக்கு 1 கைபிடி அளவு வெந்தயம், 1 கைபிடி அளவு நெல்லிக்காய் வற்றல் போன்றவைகளை நன்கு ஊரவைத்து அரைத்து தீவனத்துடன் கலந்து கொடுக்கலாம்.